# 14 சொற்கோவைக் கட்டமைப்புக்கான பரிந்துரைகள் I: சொற்பரப்புகளுடனும் விரிவாக்கப்பட்ட மொழிக் கருவிகளுடனும் செயற்படுதல்

**இலக்கு**

குடியகன்ற பெருந்தொகை மாணவர்களுக்கு, தாய்மொழிச் சொற்களஞ்சியம் முறைசாரா, குடும்பம் தொடர்பான பண்புகள், பேச்சுமொழி ஆகியவற்றுடனேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பாரம்பரியமொழிக் கல்விக்கான அறைகூவலானது, மாணவர்கள், இளையவர்களின் (பள்ளி தொடர்பான மற்றும் வெவ்வேறு வகைப்பட்ட முகப்புக்கூறுகளையும் சேர்த்துக்கொள்ளல்) எழுத்து வடிவ சொற்களஞ்சியத் தகைமையினை கட்டியெழுப்புவதும் வளர்ப்பதுவும் ஆகும். இவ்வாறு முயற்சிக்கும்போது மாணவர்கள் எத்தகைய சொற்களையும் தொடர்களையும் தமதாக்கிக்கொள்வர் (செயலி அல்லது ஆக்கவள சொற்களஞ்சியம்). தாம் விளங்கிக்கொள்ளத்தக்க ஆனால் தாம் அவற்றைப் பயன்படுத்துவது என்பது கட்டாயமல்ல (விரும்பிக்கொள்ளும் அல்லது விளங்கிக்கொள்ளும் சொற்களஞ்சியம்) என்பன பற்றி முடிவுசெய்தல் இன்றியமையாததாகும். முன்னையதை ஆழமாகப் பயிற்சிசெய்ய வேண்டும், ஆனால் பின்னையதை விளங்கிக்கொண்டால் போதும். பின்வரும் மதியுரைகளும் பயிற்சிகளும் சொற்களஞ்சியத்தைக் கட்டிடவும் எல்லா மட்டத்திலும் இதற்காக விரிவாக்கப்பட்ட கருவிகளுடன் உழைக்கவும் துணைசெய்யும்.

## 1. தலைப்புச் சார்ந்த சொற்களை சேர்த்தலும் சொற்களஞ்சியத்துடன் செயற்படுத்தலும்.


1 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

பொருட்கள்:
இயலுமாயின் A2 தாள்

ஒரு கருப்பொருள் அல்லது தலைப்புத் தொடர்பான சொற்களை ஒருங்குசேர்த்தலும் எழுதுதலும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஒருங்குசேர் அறிவையும் வளங்களையும் பயன்படுத்துவதற்கு ஒரு நல்ல முறையாகும். இச் செயன்முறை எல்லா அகவைக் குழுக்களுக்கும் வேறுபட்ட முறைகளுக்கும் பொருத்தமானதாகும். பேச்சுமொழிக்கும் எழுத்து வடிவத்துக்குமிடையே உள்ள சொற்களஞ்சிய வேறுபாடுகளை முனைப்புறுத்தவும் விளக்கமளிக்கவும் இது ஏற்ற வாய்ப்பினை வழங்குகிறது. ஒரு கருப்பொருளுடன் இணைந்த மிகவும் பொதுவாக பயன்படுத்தப்பட்ட சொற்களை எழுத்துக்கூட்டுப் பயிற்சிகளுக்கும் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்தலாம். இவ்வளர்ச்சியின் ஒரு மேலான நிலையானது சிறிய தாள் ஒட்டிகள் மற்றையமொழிக் கருவிகளான வாக்கியத் தொடக்கங்கள் அல்லது குறிப்பிட்ட எழுத்துருத் தொடர்கள் என்பனவற்றை ஒருங்குசேர்த்தலை உள்ளடக்கும் (பார்க்கவும் # 15).

இன்றியமையாதது: மாணவர்கள் தாய் மொழியிலன்றி பள்ளி மொழியில் மட்டுமே ஒரு சொல்லை அறிந்துள்ளராயின், அதே வடிவில் அவர்கள் இயல்பாக சொல்லலாம் அல்லது எழுதலாம். இது மற்றைய மாணவர்கள் மொழிபெயர்க்க துணைசெய்யவும் அல்லது அகரமுதலியை உசாவவும் உட்படுத்துகின்ற ஓர் உண்மையான கற்றல் வாய்ப்பினை வழங்குகிறது.

**எடுத்துக்காட்டு:**



- **சொற்களை ஒருங்குசேர்த்தல் (ஏற்கெனவே எனக்கு என்ன தெரியும்? ) (முன்பள்ளியிலிருந்து)**

  ஆசிரியருடைய வழிகாட்டலில் மாணவர்கள் தமக்குத் தெரிந்த தம்முடைய தாய்மொழியில் விலங்குகள், செடிகள், வீடுகள், பள்ளி முதலிய பொருள்களைக் குறிக்கும் எல்லாச் சொற்களையும் ஒருங்குசேர்த்து பதிவுசெய்வர். ஆசிரியர் சொல்லினுடைய சரியான எழுத்து வடிவத்தை வழங்குவதுடன் மிக இன்றியமையாத சொற்களைப் பலகையில் எழுதுவார். தனியே பெயர்களை மட்டுமன்றி வினைகளையும், அடைகளையும் சேர்க்கவேண்டியது இன்றியமையாதது.

  நீட்டிப்புச் செயற்பாடுகள்:
  அ) இச் சொற்களைப் பயன்படுத்தி, சிறிய வாக்கியங்கள் ஆக்கவும், முடியுமாயின் அவற்றை எழுதவும்.
  ஆ) இவ் ஒருங்குசேர்ப்பிலிருந்து 5 அல்லது மேற்பட்ட சொற்களைக் கொண்ட ஓர் எழுத்துருவை எழுதுக. சொற்களை சிவப்பில் குறிக்குக. (இது #4 இல் உள்ள கதை புனைதலின் மாற்று ஆகும்).

- **ஒரு படத்துக்குரிய சொற்களை ஒருங்குசேர்த்தல் (முன்பள்ளி – உயர் தரம்)**

  தொடக்கப் புள்ளியாக, படம் பல விவரங்களைக் கொண்டிருக்கவேண்டும். வகுப்பில் தற்போது கையாளப்பட்ட கருப்பொருளுடன் தொடர்புற்றதாகவும் இருக்கலாம், அதாவது, பிறந்த நாடு அல்லது விளையாட்டுத்திடல் பற்றிய சுவரொட்டி. நடுத்தர உயர்தர நிலைகளில், இது குறிப்பிட்ட சொற்களஞ்சியத்தை வேண்டிநிற்பதான ஒரு படத்தை அல்லது ஒளிப்படத்தை உள்ளடக்கியதாகலாம். வகுப்பில் அல்லது குழுவில், மாணவர்கள் படத்தை விவரிக்கின்றனர் (பெயர்கள், வினைகள், அடைகளைப் பயன்படுத்தி), ஒட்டுத் துண்டுகளில் எழுதி படத்திலோ பலகையிலோ ஒட்டுவர். மாற்று: முதலில், மாணவர்கள் தமக்குத் தெரிந்ததை தனித்தனியாக விவரத்துணுக்கில் எழுதி பின்னர் மற்றவர்களுடன் ஒப்பிட்டு தம் விவரத்துணுக்குகளை பரிமாற்றம் செய்வர் புதிய சொற்கூறுகளை ஒன்றாக்குதற்கு ஓர் எழுத்து ஒப்படை தொடரவேண்டும். எடுத்துக்காட்டு: முடியுமான அளவு மிக விவரங்களுடையதாக விவரிக்கவும்/படத்துடன் இணைந்ததாக ஒரு கதை எழுதவும்/படத்திலுள்ள ஓர் ஆளின் கதாபாத்திரமாக உங்களை இட்டுக்கொண்டு அவர்களுடைய உளக்காட்சியாக படத்தை விவரிக்கவும் ("மஞ்சள் கம்பளிச்சட்டையிலுள்ள பெண் நான்தான். நான் நடுவில் நிற்கிறேன். எனக்குப் பின்…").

- **ஒரு தலைப்புக்குரிய சொற்களை தேர்ந்தெடுத்து அட்டவணை அமைத்தல்**

  மாணவர்களுக்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட கருப்பொருளில் ("நான் ஓர் உழவனாக இருந்தால்", "எங்கள் நாட்டின் அரசியல் அமைப்பு" முதலியன) எழுத்து ஒப்படைகள் இருக்கும்போது, அவர்கள் உண்மையாக எழுதுவதற்கு முன்னரே (வகுப்பில் அல்லது குழுவில்) ஒருங்குசேர்த்து இன்றியமையாத சொற்கள், தொடர்கள், வெளிப்பாடுகள் (பெயர்கள், வினைகள், அடைகள்) ஆகியனவற்றை செயன்முறைக்குப் பயன்படுத்தல் ஒரு நல்ல கருத்தாகும். பொருளுடன் தொடர்புடைய சொற்கள் மற்றும் தொடர்களின் இந்த ஒருங்குசேர்ப்பு பொருள், எழுத்தியல் தொடர்பாக மாணவர் மேலுள்ள அழுத்தத்தினை குறைத்துவிடுகிறது. மாணவர்கள் இச்சொற் பரப்புகளை தனித்தனியாக உண்டாக்கலாம் பின்னர் ஒப்பிடலாம். விளக்கப்படமுறைகள், மனவரைபடங்கள் ஆகியன இவ்வொப்படைகளுக்கு ஏற்றதாக அமைகின்றன.